## வீதி நாடக முன்னோடியின் நூற்றாண்டு!

மக்களைத் தேடிச் சென்று திறந்தவெளியில், பூங்காக்களில், வீதிகளில் நிகழ்த்தப்படுகிற நாடகங்களின் முன்னோடிகளில் ஒருவர் பாதல் சர்க்கார்.

வங்க மொழியில் மிக முக்கியமான நாடகாசிரியரான பாதல் சர்க்கார், அரசியல் நாடகங்கள் மூலம் இந்திய அளவில் அறியப்பட்டவர். வீதி நாடகங்களின் மூலம், சமூக மாற்றத்தைப் பேசிய, அவரது நூற்றாண்டினைக் கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள்ளனர், பாதல் சர்க்காரின் மீது மதிப்பு வைத்துள்ள நாடகச் செயற்பாட்டாளர்கள்.

1925-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 15-ஆம் தேதி பிறந்தவர் பாதல் சர்க்கார். அதையொட்டி, அவரது நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை இந்த ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதியை பாதல் சர்க்கார் தினமாகக் கடைப்பிடித்து திறந்தவெளியில் வீதி நாடகங்களை நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளனர்.

தனது நாடகச் செயல்பாடுகளை ‘மூன்றாம் அரங்கு’ [Third Theatre] என்ற பெயரில் தனது குழுவின் மூலம் அரசியல் நாடகங்களை நடத்தத் தொடங்கினார். ‘தெருக்கூத்து’, ‘கதகளி’ போன்ற தொன்மையான கலைவடிவங்களை, ‘முதல் வகை அரங்கு’ எனவும், மேற்கத்திய நாடுகளின் பாதிப்பில் உருவான மேடை நாடகங்களை ‘இரண்டாம் அரங்கு’ எனவும், மக்களைத் தேடிச் சென்று திறந்த வெளியில் புதிய அரசியல் உள்ளடக்கம் பேசுபவை ‘மூன்றாம் அரங்கு’ எனவும் புதிய பாணியை உருவாக்கி, அதைப் பரவலாக்கியவர் சர்க்கார்.

அவரது மேடை நாடகங்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, நாடு முழுவதும் நடிக்கப்பட்டு வருகின்றன. 1970-ஆம் ஆண்டுகளில், இடதுசாரி இயக்கங்களோடு பயணித்த அவர், பின்னர் தனியாகச் செயல்படத் தொடங்கினார்.

“சமூகமாற்றம் பற்றிப் பேசாத எந்த ஒரு நாடகத்தையும் நாங்கள் நடத்த மாட்டோம். அதை நானே எழுதியிருந்தாலும் நடத்த மாட்டேன்” என்றவர், பாதல் சர்க்கார்.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.வாஞ்சிநாதன்

### ஆசிரியருக்கு முத்தமிழின் மரியாதை!

1989-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வெற்றி பெற்றார். முதல் பயணமாக திருவாரூருக்கு அஞ்சுகம் அம்மையாரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக வருகை தந்தார். அப்போது, அவரை வரவேற்க நான், என் தந்தையருடன் திருவாரூர் ரயில் நிலையத்துக்கு மலர் மாலையுடன் சென்றிருந்தோம். என் தந்தை சாம்பசிவம், தலைவர் கலைஞர், முரசொலி மாறன், முரசொலி செல்வம் ஆகியோருக்கு ஆசிரியராக இருந்தவர். இந்த வரவேற்பின்போது, என் தந்தையை அடையாளம் கண்டுகொண்டு, அவரை மேடைக்கு அழைத்து வாழ்த்தினார். அப்படியான தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**– எஸ்.வாஞ்சிநாதன், வழக்கறிஞர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சட்டமன்றமும் சட்டப் போராட்டமும்!

1957-ஆம் ஆண்டு தந்தை பெரியார் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகிய இரு திராவிடர் கழகத் தோழர்கள் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் குறித்து, பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து நெருக்கடி அளித்தார். அப்போது, திராவிடர் கழகப் பொறுப்புகளைக் கவனித்து வந்த மணியம்மையாரின் சட்டப் போராட்டங்களுக்குப் பின்னரே இருவரது உடல்களும் திராவிடர் கழகத்தினரிடம் அளிக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டன.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **20**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

## சாதிப் பெருமிதம் எதற்கும் உதவாது!

மண்டல் குழுவின் பரிந்துரைகளை, சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் வரை, ஒன்றிய அரசின் கீழுள்ள வேலைவாய்ப்புகளிலும் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு வழங்கப்பட வில்லை.

தமிழ்நாடு போன்ற மிகச்சில மாநிலங்கள் விதிவிலக்காக இருந்தாலும், 1990கள் வரை ஒன்றிய அரசைப் போலவே, மேற்கு வங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநில அரசுகளின் கீழுள்ள வேலைவாய்ப்புகளிலும் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை. அதேபோல், குறிப்பிடத்தக்க அளவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இல்லாத சிறிய மாநிலங்களைத் தவிர்த்துவிட்டால், இந்திரா சஹானி வழக்குத் தீர்ப்பின் படி, உச்சநீதிமன்றம் அனுமதித்த 50 சதவிகித இடஒதுக்கீட்டு உச்சவரம்பை இன்றுவரை முழுமையாகப் பயன்படுத்தாத பெரிய மாநிலங்களில் மேற்கு வங்கமும் ஒன்று.

மேற்கு வங்கத்தில் முதன்முறையாக, 1994-இல் அரசு வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 5 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பின்னர், அது 7 சதவிகிதமாக உயர்ந்தது. அதன் பின்னர், 2012-இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 17 சதவிகித இடஒதுக்கீடு வழங்கிய சட்டத்தை கொல்கத்தா உயர் நீதிமன்றம் அண்மையில் தடைசெய்துவிட்டது. அதனால், மேற்கு வங்கத்தில் உயர்கல்வி நிறுவனங்களில், இதுவரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு இல்லை. இது இன்றைய நிலை.



வி.பி.சிங்

2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மேற்கு வங்கத்தின் 9.1 கோடி மக்கள் தொகையில், இந்துக்கள் 70.5 சதவிகிதம், முஸ்லிம்கள் 27 சதவிகிதம், பிறசமூகத்தினர் 2.5 சதவிகிதம் இருந்தனர். இந்துக்களில் பட்டியல் சாதிகள் 23.51 சத விகிதம், பழங்குடியினர் 5.85 சதவிகிதமாக இருந்தனர். மண்டல் குழுப் பரிந்துரைகளின்படி, மேற்கு வங்க மக்கள் தொகையில் முஸ்லிம்களை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்டோர் 40 சதவிகிதம்.

பட்டியலின, பழங்குடியின, இந்து பிற்படுத்தப்பட்டோர், முஸ்லிம் பிற்படுத்தப்பட் டோர் என அனைவரையும் சேர்த்தால், தோராயமாக 90 சதவிகித மக்கள் பிற்படுத்தப் பட்டோர் வரையறைக்குள் வருவார்கள். மேற்கு வங்கத்தில் 10 சதவிகிதம் மட்டுமே உள்ள முற்படுத்தப்பட்ட சாதியினர், எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும், 90 சதவிகிதம் உள்ள பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆனால், இந்த ஆதிக்கத்தை மாற்றியமைக்க, வலுவான இயக்கச் செயல்பாடுகள் இல்லை என்கிறார் பேராசிரியர் பார்த்தா சாட்டர்ஜி.

பிராமணர்கள் மட்டுமல்லாது, காயஸ்தா, பைத்யா ஆகிய மூன்று முற்படுத்தப்பட்ட சாதியினர் ஆதிக்கம் செலுத்தினாலும், ஆங்கிலேயர்கள் வடிவமைத்த பொதுக்கல்வி முறையின் கீழ், படித்துப் பயன் பெற்ற ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தம் சமூக நிலையை உயர்த்துவதற்காக, கல்வியில் சிறப்பு ஏற்பாடுகளைக் கோரினர். **‘மகிஷ்ய சமிதி’** பரந்த அடிப்படையிலான இயக்கத்தை ஒழுங்கமைக்க முயற்சித்தது.

அதேபோல் கிழக்கு வங்காளத்தில் சஹாஸ் தங்களுக்கென 1898-இல் டாக்காவில் ’ஸ்வஜாதி ஹிட்டா சதானி சமிதி’, 1909-இல் ‘புர்பபங்கா வைசிய சமிதி’ உள்ளிட்ட அமைப்புகளை நிறுவினர். அதேபோல் பவுந்திர-க்ஷத்திரியர்கள், பாருயிஸ், ஜோகிஸ், வைசிய பருஜிபி, கர்மகர்கள் போன்ற சாதியினரும் அமைப்புகளை நிறுவினர். தனித்தனி சாதிகள் தங்களுக்கென அமைப்புகளை உருவாக்கி, கோரிக்கைகளை எழுப்பினாலும், தமிழ்நாடு, மராட்டியம் போன்று ஒருங்கிணைந்த பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாகவில்லை. வங்காளத்தின் சாதிய படிநிலை அமைப்பும், சத்சூத்திரர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்ட இடைநிலைச் சாதிகளின் ஒற்றுமையின்மையும் போட்டியும் ஒருங்கிணைவுக்குத் தடையாக இருந்தன. இருப்பினும், அடிப்படையில் சமூகப் படிநிலையில் உயர் மட்டத்தை எட்டவேண்டும் என்ற வேட்கை, மாறாமல் இருக்கிறது.

**மேற்கு வங்கத்தில் உயர்கல்வி நிறுவனங்களில், இதுவரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு இல்லை. இது இன்றைய நிலை.**

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** **20**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## தஞ்சை மாநாட்டில் சிங்க கர்ஜனை!

சாதி ஒழிப்பு இலட்சியத்தில் பெரியாரையும், திராவிட இயக்கத்தையும் கேள்விக்குள்ளாக்க நினைக்கும் எவரும் திரும்பிப் பார்க்க வேண்டிய திசை தஞ்சை. நாள் 03.11.1957. சாதியைக் காக்க, அரசியலமைப்பில் பின்னப்பட்ட வலைகளைத் தோலுரித்து தஞ்சை ஸ்பெசல் மாநாட்டில் பெரியார் மிக நீண்டதொரு உரையை ஆற்றி, ஒட்டுமொத்தக் கூட்டத்தையும் உணர்ச்சிப் பிழம்பில் ஆழ்த்தியிருந்தார். அந்த உணர்வலைகளுக்கு மத்தியில், மிக முக்கியத் தீர்மானம் ஒன்று அன்றைய ஆளும் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டது. “நெடுங்கால சாதிக்கொடுமைச் சுரண்டல்களுக்கு முடிவுகட்ட சர்க்காருக்கு 15 நாள் அவகாசம் கொடுக்கிறோம். சாதிப் பிரிவுகளைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகள்- 13, (2), 25 ,(1), 29, (1, 2), 368 ஆகிய பிரிவுகளை நீக்கிவோ, திருத்தவோ வேண்டும். இல்லா விட்டால், நவம்பர் 26-ஆம் தேதி அப்பிரிவுகளைத் தீயிலிட்டுக் கொளுத்துவோம்” என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரியாரின் போர்க்குணத்தைக் கண்டு, நாடே அதிர்ந்தது. அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால், என்ன தண்டனை என்பதே சட்டத்தில் இல்லாத காலம் அது. பெரியாரின் கோரிக்கைக்குத் தீர்வு காண முயலாமல், சட்டத்தைக் கொளுத்தினால், 3 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என அவசர அவசரமாக மசோதா முன்வைக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்ற விவாதத்துக்கு வந்தது. அதன் மீதான விவாதத்தில் பேசிய பேரறிஞர் அண்ணா, “சட்டத்தை அவமதித்தால் மனம் புண்படும் என்றால், பெரியாரைக் கைது செய்தாலும் இங்கு பல இலட்சம் பேரின் மனம் புண்படும். பெரியாரின் நோக்கம் சட்டத்தை இழிவு படுத்துவது அல்ல, சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை நீக்க வேண்டுமென்பதே. அதைச் செய்துவிட்டால், ஏன் கொளுத்தப் போகிறார்? 3 ஆண்டு சிறை என்பதை 30 ஆண்டுகள் என மாற்றினாலும், உங்களுக்குப் பயன் ஏற்படாது, பெரியார் பின்வாங்க மாட்டார். காமராஜ் ஓங்கி அடித்தாலும், ‘காமராஜரின் கை வலிக்குமே’ என்றுதான் பெரியார் கவலைப்படுவார். ‘ஊருக்கு இளைத்தவன் ஆண்டி’ என்பதைப் போல என்னைத்தான் தாக்குவாரே ஒழிய, காமராஜ் பக்கம் திரும்ப மாட்டார். அந்த அளவுக்கு உங்கள் மேல் பாசம் வைத்திருக்கும் பெரியாரைப் பாதி வழியில் சந்தித்து, உங்கள் தேசியக் கொடியின் கவுரவத்தைக் காப்பாற்றினால்தான் என்ன?” என்று கேள்வி எழுப்பினார்.




பெரியாரின் நோக்கத்தினை உணர்ந்து, சட்டமன்றத்தில் ஒலித்த ஒற்றைக்குரல் பேரறிஞரின் குரல். காமராஜர் பதில் சொல்லாமல் அமைதிகாத்தார், சட்டம் நிறைவேறியது. “சாதியைத்தான் காப்பாற்ற வேண்டுமென்று அரசு முடிவெடுத்துவிட்டது. சட்டத்தை கொளுத்துங்கள்” என ஆணையிட்டார் பெரியார். முன்கூட்டியே பெரியாரைக் கைதுசெய்துவிட்டால், போராட்டத்தைத் தடுத்துவிடலாம் என தப்புக்கணக்கு போட்டது அரசு. 10,000-க்கும் மேற்பட்டோர் சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளைத் தீயிலிட்டுக் கொளுத்தினர். அதற்கு ஆதாரமாக சாம்பலை அரசுக்கு அனுப்பி வைத்தனர். போராட்டக் காரர்களைக் கைது செய்ய முடியாமல் திணறியது காவல்துறை. மூவாயிரத்து சொச்சம் பேரை மட்டுமே சிறையிலடைத்தனர். கையில் சாம்பலோடு, கருப்புச்சட்டையுடன் காவல் நிலையத்திற்கே சென்றனர் பலர். ஒருவர் கூட, அபராதம் கட்டவில்லை, பிணை கேட்க வில்லை. சிறைக்குள்ளேயும், சிறைக்கு வெளியேயும் 17 பேர் உயிர் நீத்தனர். சிங்கத்தின் கர்ஜனைக்கு செவிசாய்க்காவிட்டால், சேதாரத்தைச் சந்தித்துத் தானே தீர வேண்டும்!


**“சாதியைத்தான் காப்பாற்ற வேண்டுமென்று அரசு முடிவெடுத்துவிட்டது. சட்டத்தை கொளுத்துங்கள்” என ஆணையிட்டார் பெரியார்.**

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**541**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131